இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 181 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 28 – திங்கள்கிழமை 10 பிப்ரவரி 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 181 : Thiruvalluvar Year - 2056 - Thai 28 - Monday 10 February 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு மக்கள் தொடர்ந்து அங்கீகாரம்!

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: கழக வேட்பாளர் மகத்தான வெற்றி!

## கழகத் தோழர்கள் மகிழ்ச்சி, ஆரவாரம், கொண்டாட்டம்!

**ஈரோடு, பிப்.10 -**

**ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் வி.சி. சந்திர குமார் மகத்தான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார். இதனைக் கண்டு கழகத் தோழர்கள் மகிழ்ச்சி, ஆரவாரம் செய்து கழகத்தினர் வெற்றியைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.**

**ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டி யிட்ட வி.சி.சந்திரகுமார், தம்மை எதிர்த்துப் போட்டி யிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளரைவிட 90,629 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வாகை சூடினார்.**

**கழக வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட் பாளர் உள்பட அனைவரும் டெபாசிட் இழந்தனர்.**

**இது பற்றிய விவரம் வருமாறு:-**

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகு திக்கான இடைத்தேர்தலை கடந்த ஜனவரி 7ம் தேதி தேர்தல் ஆணை யம் அறிவித்தது. இந்தத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் உள்ளிட்ட 46 பேர் போட்டியிட்டனர்.

இந்த தேர்தலில் ஆண் வாக்காளர் கள் 1 லட்சத்து 10 ஆயிரத்து 128 பேரும், பெண் வாக்காளர்கள் 1 லட்சத்து 17 ஆயிரத்து 381 பேரும், மூன்றாம் பாலினத்தவர்கள் 37 பேரும் என மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்களிக்க 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டி ருந்தன.



வாக்குப்பதிவு 5.2.2025 அன்று காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெற்றது.

இதில் 67.97 சதவீதம் வாக்குகள் பதிவாகின. வாக்குப்பதிவு நிறை வடைந்ததும், வாக்குப் பெட்டிகள் அர சியல் கட்சியின் வாக்குச்சாவடி முக வர்களின் முன்னிலையில் சீல் வைக் கப்பட்டன.

ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்ட வாகனங்களில் துப்பாக்கி ஏந்திய துணை ராணுவம், போலீஸ் பாது காப்புடன் வாக்கு எண்ணிக்கை மையமான சித்தோட்டில் உள்ள ஈரோடு அரசு பொறியியல் கல்லூ ரிக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. வாக்கு எண்ணிக்கை மையத்தில், 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு தீவிர கண்கா ணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட் டது. முதல் அடுக்கில் ஸ்ட்ராங் ரூம் பகுதியைச் சுற்றியும் மத்திய தொழிற்பாதுகாப்புப் படையினரும், இரண்டாம் அடுக்கில் தமிழ்நாடு பட்டாலியன் போலீசார், மூன்றாம் அடுக்கில் ஆயுதப்படை போலீசார், நான்காம் அடுக்கில் லோக்கல் போலீ சாரும் 24 மணி நேரமும் 3 ஷிப்ட் முறையில் 400க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

வாக்கு எண்ணிக்கை நேற்று முன்தினம் (8ஆம் தேதி) காலை 8 மணிக்கு தொடங்கியது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதி வான வாக்குகள் 14 மேஜைகளில் எண்ணப்பட்டன.

தொடக்கம் முதலே கழக வேட்பா ளர் வி.சி.சந்திரகுமார், தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளரை விட ஆயிரக் கணக்கான வாக்குகள் வித்தியா சத்தில் முன்னிலை பெற்று விளங்கினார்.

சுற்றுகள் வாரியாக பெற்ற வாக்குகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| **முதல் சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 7,837 |
| நாம் தமிழர் | - 1,081 |
| **இரண்டாவது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 15,949 |
| நாம் தமிழர் | - 2,328 |
| **3வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 22,682 |
| நாம் தமிழர் | - 4,030 |
| **4வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 30,657 |
| நாம் தமிழர் | - 6,014 |
| **5வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 36,880 |
| நாம் தமிழர் | - 7,668 |
| **6வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 43,427 |
| நாம் தமிழர் | - 9,152 |
| **7வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 49,251 |
| நாம் தமிழர் | - 10,587 |
| **8வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 55,849 |
| நாம் தமிழர் | - 12,028 |
| **9வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 61,683 |
| நாம் தமிழர் | - 13,443 |
| **10வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 69,723 |
| நாம் தமிழர் | - 15,008 |
| **11வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 76,278 |
| நாம் தமிழர் | - 16,547 |
| **12வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 88,191 |
| நாம் தமிழர் | - 17,679 |
| **13வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 89,931 |
| நாம் தமிழர் | - 19,078 |
| **14வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 96,450 |
| நாம் தமிழர் | - 20,384 |
| **15வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 1,01,303 |
| நாம் தமிழர் | - 21,110 |
| **16வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 1,08,305 |
| நாம் தமிழர் | - 22,992 |
| **17வது சுற்று** | |
| சந்திரகுமார் (தி.மு.க.) | - 1,14,439 |
| நாம் தமிழர் | - 23,810 |

**வாக்குகள் வித்தியாசம் - 90,629.**

கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளரை விட, 90,629 வாக்குகள் கூடுதலாகப் பெற்று மகத்தான வெற்றி பெற்றார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உள்பட அனைத்து வேட்பாளர்களும் டெபாசிட் இழந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது.

# “நல்லாட்சிக்கான நற்சான்றிதழ்தான் ஈரோடு கிழக்கு வெற்றி!”

## கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, பிப். 10 -**

**ஈரோடு வெற்றி நல்லாட்சிக்கான நற்சான் றிதழ்தான் ஈரோடு வெற்றி என தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.**

**முதல்வர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்த லில் திராவிட முன்னேற்றக் கழகம் தலை மையிலான கூட்டணி சார்பில் போட்டியிட்ட வெற்றி வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் அவர் கள் ஒரு லட்சத்து 15 ஆயிரத்துக்கும் மேலான வாக்குகளைப் பெற்று மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார். இந்த மகத்தான வெற்றியை வழங்கிய ஈரோடு கிழக்கு வாக் காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தோழமைக் கட்சியினர் அனைவருக்கும் நன்றி!**

தோழமையின் இலக்கணமாகச் செயல் பட்டு, கழகத்தின் வெற்றிக்காக உழைத்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்கும் தோழ மைக் கட்சியினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழமைக் கட்சித் தலைவர்கள், தொண் டர்கள் ஆற்றிய பணியை மறக்க முடியாது. பல்வேறு சமூக அமைப்புகள், கட்சிகள் தி.மு.க.வின் வெற்றிக்காகப் பணியாற்றி னார்கள். அவர்களுக்கும் நன்றி தெரி வித்துக் கொள்கிறேன்.

**கழக ஆட்சிக்கு மக்கள் தந்த மாபெரும் அங்கீகாரம்!**

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும், மக்கள் ஆதரவுடன் 2021-ஆம் ஆண்டு அமைந்த இந்த ஆட்சிக்கும், நாம் செயல்படுத்தி வரும் உன்னதமான திட்டங்களுக்கும் மக்கள் அளித்துள்ள மாபெரும் அங்கீகாரம்தான் இந்த வெற்றி! தேர்தலுக்கு முன்னதாகவே வெற்றி யாருக்கு என்பதை உணர்ந்து விட்ட எதிர்க்கட்சிகள், களத்துக்கே வராமல் புறமு துகிட்டு ஓடிய காட்சியையும் முன்கூட்டியே தமிழ்நாடு பார்த்து விட்டது.

2019 முதல் நடைபெற்ற இரண்டு நாடா ளுமன்றத் தேர்தல்கள், சட்டமன்றப் பொதுத் தேர்தல், உள்ளாட்சி அமைப்புத் தேர்தல் கள், இடைத்தேர்தல்கள் ஆகிய அனைத்தி லும் தி.மு.க. கூட்டணியானது தொடர் வெற் றியைப் பெற்று வந்துள்ளது. முக்கிய எதிர்க்கட்சியான அ.தி.மு.க. படுதோல் வியை அடைவதும் தொடர்கதையாக அமைந்தது. எனவே தேர்தல் களத்துக்கே வராமல் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பங்கெடுக்காமல் தலைமறைவானது அ.தி. மு.க. ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வுக்குப் பாடம் புகட்ட மக்கள் தயா ரான நிலையில் இங்கும் பதுங்கிவிட்டது. தொடர் தோல்விகளால் ஏற்பட்ட சோர்வும், தேர்தல்களை எதிர்கொள்ளத் தைரியம் இல் லாமலும் போன அ.தி.மு.க. இன்று மக்கள் மனதில் இருந்து மெல்லமெல்ல மறைந்து மங்கிக் கொண்டிருக்கிறது என்பதே முழு உண்மையாகும்.

**திராவிட மாடல் ஆட்சியில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயன்!**

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியைப் பொருத்தவரையில் மூன் றரை ஆண்டு கால திராவிட மாடல் ஆட்சி யின் சாதனைகளை மக்கள்முன் வைத் தோம். தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பமும் தனிப்பட்ட முறையில் பயனடை யும் திட்டங்களை நிறைவேற்றி வருவதை மக்கள் அனைவரும் நேரடியாக உணர்ந் துள்ளார்கள். சாதனைகளைச் சொல்லி வாக்கு கேட்கும் நிலையையும் தாண்டி, சாதனைகள் என்பவை மக்கள் மனதில் பதிந்ததாக இருந்தது. மகத்தான திட்டங்களைத் தரும் தி.மு.க. அரசுக்கு, மகத் தான வெற்றியைத் தர மனமுவந்து மக்கள் முடிவெடுத்தார்கள். தங்களது பெரிய எண் ணத்தை எண்ணிக்கையாகக் காட்டி வாக் குகளை அள்ளித் தந்துள்ள ஈரோடு கிழக்கு வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். கழக வேட்பாள ராக அறிவிக்கப்பட்ட ஆருயிர் சகோதரர் சந் திரகுமாரை, வெற்றி வேட்பாளராக ஆக்கி - சட்டமன்றத்துக்குள் அழைத்து வர உழைத்த தேர்தல் பொறுப்பாளர்கள் மாண் புமிகு சு. முத்துசாமி உள்ளிட்ட தலைவர் கலைஞரின் உயிரினும் மேலான அனைத்து உடன்பிறப்பு களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெற்றி பெற்ற சந்திரகுமார் முன் மாதிரியாக செயல்படுவார்!**

ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள், அத்தொகுதியின் மக் கள் பிரதிநிதியாக இருந்து தொகுதி மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் முன்மா திரி சட்டமன்ற உறுப்பினராகச் செயல்படு வார்.

எங்களது நன்றியின் அடையாளமாக எப்போதும் மக்களுக்கு உண்மையாக இருப்போம்! ஈரோடு கிழக்கு தொகுதியை மட்டுமல்ல மேற்கு மண்டலம் முழுவதையும் வளப்படுத்த, மேம்படுத்தத் தேவையான திட் டங்களைச் செயல்படுத்திக் காட்டுவோம். மேற்கு மண்டல மக்களின் கோரிக்கை களை நிறைவேற்றிக் காட்டுவோம் என்று உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளார்.

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்ததை கண்டித்து ஆவடியில் நேற்று முன்தினம் (8.2.2025) நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர்,**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின்**

**எழுச்சிப் பேருரை...**

2—ஆம் பக்கம்